# ஈழத்துச்சிதம்பர புராணம் வெளிப்படுத்தி நிற்கும் விருந்தோம்பல் சிந்தனைகள்

துஹாயா.பே

**ஆய்வுச்சுருக்கம்:**

இலங்கையின் சைவப்பண்பாட்டு வளர்ச்சிக்கு சிவாலயங்களை மையமாகக் கொண்டு எழுந்த தலபுராணங்களின் வகிபங்கும் குறிப்பிடத்தக்கது. சிவத்துடன் தொடர்புடைய சைவத் தலபுராணங்களானவை வெறுமனே சமயபக்தி இலக்கியம் என்பதனைத் தாண்டி சமூகப்பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டவையாக விளங்குகின்றன. மகளிரைப்போற்றும் பண்பாடு, அறவியல் பண்பாடு, அறிவியற்பண்பாடு, ஊர்ச்சிறப்பு, திருக்கோவிலுக்கு அடியவர்கள் ஆற்றிய சேவைகள் போன்ற பல்வேறு சமூகக்கூறுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. இலங்கையில் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், திருக்கரசைத்தலம், நகுலேச்சரம், நல்லூர் கைலாசநாதர் கோயில், ஈழத்துச்சிதம்பரம் எனும் சிவத்தலங்களை மையப்படுத்தி, இத்தலங்கள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களின் சமுதாயக் கூறுகளின் அடிப்படையில் சைவம் சார்ந்த பண்பாட்டினைப் பிரதிபலித்துக் காட்டுவனவாக மேற்குறித்த தலங்களின் மீது தலபுராணங்கள் தோற்றம் பெற்றன. அந்தவகையில் இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் காரைநகர் என வழங்கும் காரைதீவிலே திண்ணபுரம் எனும் பிரிவிலுள்ள ஈழத்துச்சிதம்பரத்தில் கோயில் கொண்டருளிய சிவபிரான் மீது பாடப்பெற்றதே திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச்சிதம்பர புராணமாகும். இப்புராணமானது கொண்டுள்ள சமூகப் பண்பாட்டிலே இந்துக்களின் வாழ்வியல் நெறிகளில் ஒன்றான விருந்தோம்பற் பண்பாடானது சிறப்பிற்குரியதாகக் காணப் படுகின்றது. இப்புராணமானது விருந்தோம்பல் முறை, காரைநகர் மகளிரின் விருந்தோம்பல் மாண்பு, ஆடவரின் விருந்தோம்பற் சிறப்பு, அவ்வூர் விவசாயிகளின் விருந்தோம்பற் சிறப்பு, சிவனடியாருக்கு திருவமுதூட்டி உபசரிக்கும் முறைமை என்பனவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனாலும் இன்று சமூக விழுமியங்களை வெளிப்படுத்தும் இந்துமத நியமமாக உள்ள விருந்தோம்பற் பண்பாட்டின் தாற்பரியமானது சமூகத்தின் மத்தியில் உணர்த்தப்பட்ட தன்மை மிகக் கருதலாகவே காணப்படுகின்றது. ஆகவே ஈழத்துச்சிதம்பர புராணத்திலுள்ள விருந்தோம்பற் சிந்தனைகளை வெளிக்கொணர்தலே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வானது விபரண ஆய்வு முறையியல், வரலாற்றாய்வு முறையியல் மற்றும் ஒப்பீட்டாய்வு முறை ஆகிய ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** ஈழத்துச்சிதம்பர புராணம், தலபுராணம், சமூகப்பண்பாடு, சைவம், விருந்தோம்பல்

இந்துநாகரிகத் துறை, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thukaya@univ.jfn.ac.lk